முன்னாள் உறுப்பினர்களின் மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித் துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

உறுப்பினர் திரு. வை. பெருமாள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. பெருமாள் அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானம்.

"சிறந்த தொழிற்சங்கவாதியும், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையில் உறுப்பினராகப் பணியாற்றியவரும், இனிய பண்பும், செயல் ஆற்றல் கொண்டவரும், அனைத்துத் தரப்பினரிடமும் நட்புணர்வோடு திகழ்ந்தவருமான திரு. வை. பெருமாள் அவர்கள் 13-8-2001 அன்று திடீரென மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவால் அவரை இழந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்துவிட்ட மாமன்ற உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காத்ததன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த இம்மாமன்ற உறுப்பினருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவை இன்று இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றது.

2001 ஆகஸ்ட் 16] [பேரவைத் தலைவர்]

2001-2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை அளிக்கும் பொருட்டு நாளை மறு நாள் 18-8-2001 சனிக்கிழமை காலை 10-30 மணிக்குப் பேரவை கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை முற்பகல் *10-04* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.